**07.04.2026**

**SC No.** 502/2017 **PW.**1 **ஸ்டாலின்**

எதிரி-6 ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை.பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து மாண்புமிகு சென்னை நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவுப்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**இந்நீதிமன்ற Crl.MP.No.** 5915/2025**, நாள்** 11.02.2026 **உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு பணி நிமித்தமாக, புகார் சம்பந்தமான பதிவேடு, movement regiser, தகவல் சம்பந்தமான பதிவேடு ஆகியவை பராமரிக்கப்படும் என்றால் சரிதான். எங்களுக்கு தினசரி வருகை பதிவேடு, எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும். அசா.6 சீனிவாசன் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்று எங்கள் அலுவலக பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சீனிவாசன் புகார் கொடுத்த அன்றே அந்த புகார் குறித்து அன்றைய தினம் மாலை எங்கள் அலுவலகம் சார்பில் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. நான் அளித்த புகாரில், அசா2 சோபனாகுமாரியும் கையொப்பம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் எங்கள் அலுவலக முத்திரை எதுவும் வைக்கப்படவில்லை என்றால் சரிதான். துணைஇயக்குனர் எனக்கு வழங்கிய உத்தரவை நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன். நான் அளித்த புகாரிலும், எனக்கு உயர் அதிகாரியான துணை இயக்குனர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் சரிபார்த்து ஒப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். கூடல்புதூர் காவல் நிலையத்தில் இருந்து மறவன்குளம் பகுதிக்கு செல்ல

சுமார் 1 1/2 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். புகார் மனுவில் அடித்து திருத்தம் செய்யப்பட்ட இடத்தில் என்னால் initial செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிடிபட்ட நபர்கள் கொடுத்த வாக்குமூலம், கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது. அந்த வாக்குமூலங்களில் நானும் அசா2ம் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது காவல் நிலையத்தில் வைத்து தான் என்றால் சரிதான். பொதுவாக காணாமல் போனதாகச் சொல்லப்படும் ஒரு குழந்தையை மீட்கும் போது, மீட்கும் இடத்தில் அந்த இடம் சம்பந்தமாக அத்தாட்சி தயார் செய்து ஆவணம் தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக, குழந்தையை மீட்ட இடத்தில் இருந்து, குழந்தையை மீட்டதற்கு அத்தாட்சியாக அது போன்ற எந்த ஆவணமும் நான் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். குழந்தையை மீட்ட இடத்தில், எனது கைபேசியில் வீடியோவோ, அல்லது போட்டோக்களோ எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில் துணை இயக்குநர் உத்தரவின் பேரில் நான் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், அதசாஆ.1 புகார் மனுவை காவல் நிலையம் சென்று நான் கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு அதன் பின்னர் என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. மறவன்குளம் பாக்கியலெட்சுமி என்பவர் வீட்டில் ஆண் குழநதையை மீட்டோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், அதசாஆ.3, அதசாஆ.4 ஒப்புதல்வாக்குமூலங்கள் என் முன்பும், அசா2 முன்னிலையிலும் தயாரிக்கப்படவில்லை என்றும் பின்னிட்டு நாங்கள் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் மீட்கப்பட்டதாகச்

சொல்லப்படும் குழந்தைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் அந்த குழந்தையை மீட்டு காப்பகத்தில் சேர்த்ததாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் பராமரிக்கும் ஆவணங்களை போலீசார் விசாரணையின் போது காண்பித்தேனா என்றால் இல்லை. நாங்கள் ஆவணங்கள் எதுவும் பராமரிக்கவில்லை என்றும் அதனால் தான் போலீசாரிடம் அவற்றை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.07 17:03:59 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை

**07.04.2026**

**SC No**. 502/2017 **PW**.2.சோபனாகுமார்

எதிரி-6 ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை.பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து மாண்புமிகு சென்னை நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவுப்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**இந்நீதிமன்ற Crl.MP.No. 5915/2025, நாள் 11.02.2026 உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

காவல் நிலையத்தில் வைத்து 2 முதல் 5 எதிரிகளை எனக்கு போலிசார் அடையாளம் காண்பித்தார்கள் என்றால் சரிதான். அதே போல் டிரஸ்ட் நடத்தும் சித்ராபாய் மற்றும் ராஜசேகரனையும் காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காண்பித்தார்கள் என்றால் சரிதான். அதசாஆ.3, அதசாஆ.4 ஒப்புதல் வாக்குமூலங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து கணினியில் தயாரிக்கப்பட்டது என்றாலும் அதில் தான் நானும் அசா1ம் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். குழந்தை மீட்கப்பட்டபோது, நாங்கள் தயார் செய்த ஆவணங்களை போலிசார் விசாரணையின் போது கொடுக்கவில்லை. எனக்கு பணி நிமித்தமாக, புகார் சம்பந்தமான பதிவேடு, movement regiser, தகவல் சம்பந்தமான பதிவேடு ஆகியவை பராமரிக்கப்படும் என்றால் சரிதான். எங்களுக்கு தினசரி வருகை பதிவேடு, எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும். அசா.6 சீனிவாசன் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்று எங்கள் அலுவலக பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சீனிவாசன் புகார் கொடுத்த அன்றே அந்த புகார் குறித்து அன்றைய தினம் மாலை எங்கள் அலுவலகம் சார்பில் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அசா1 அளித்த புகாரில், நானும் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அசா1 அளித்த புகாரில் எங்கள் அலுவலக முத்திரை எதுவும் வைக்கப்படவில்லை என்றால் சரிதான். கூடல்புதூர் காவல் நிலையத்தில் இருந்து மறவன்குளம் பகுதிக்கு செல்ல சுமார் 1 1/2 மணி நேரம் ஆகும்

என்றால் சரிதான். பொதுவாக காணாமல் போனதாகச் சொல்லப்படும் ஒரு குழந்தையை மீட்கும் போது, மீட்கும் இடத்தில் அந்த இடம் சம்பந்தமாக அத்தாட்சி தயார் செய்து ஆவணம் தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக, குழந்தையை மீட்ட இடத்தில் இருந்து, குழந்தையை மீட்டதற்கு அத்தாட்சியாக அது போன்ற எந்த ஆவணமும் நான் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். குழந்தையை மீட்ட இடத்தில், எனது கைபேசியில் வீடியோவோ, அல்லது போட்டோக்களோ எடுக்கவில்லை என்றால் சரிதான். மறவன்குளம் பாக்கியலெட்சுமி என்பவர் வீட்டில் ஆண் குழந்தையை மீட்டோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னது பேல், அதசாஆ.2, அதசாஆ.3 ஒப்புதல் வாக்குமூலங்கள் என் முன்பும், அசா1 முன்னிலையிலும் தயாரிக்கப்படவில்லை என்றும் பின்னிட்டு நாங்கள் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் மீட்கப்பட்டதாகச் சொல்லப்படும் குழந்தைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் நான் சொன்னது போல் அந்த குழந்தையை மீட்டு காப்பகத்தில் சேர்த்ததாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் பராமரிக்கும் ஆவணங்களை போலீசார் விசாரணையின் போது காண்பித்தேனா என்றால் இல்லை. நாங்கள் ஆவணங்கள் எதுவும் பராமரிக்கவில்லை என்றும் அதனால் தான் போலீசாரிடம் அவற்றை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2026.04.07 17:04:12 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை